# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.220/மா/2018**
**ஆணை நாள்:11.7.2019**

**திரு. எஸ். ஆனந்தன்,**
**A-9- ரெட்டம்மா அப்பார்ட்மென்ட்,**
**44-B, ஆற்காடு சாலை,**
**விருகம்பாக்கம், சென்னை -92.** **- முறையீட்டு மனுதாரர்**

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் - 10,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.** **- எதிர் மனுதாரர்**

சென்னை, விருகம்பாக்கம், 44-B, ஆற்காடு சாலை, A-9, ரெட்டம்மா அப்பார்ட்மெண்ட்டில் வசிக்கும் திரு. எஸ். ஆனந்தன் என்பவரின் 7–9–18 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 220/18 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம், ஆவணங்கள், பெருநகர சென்னை மாநகராட்சி 10-வது மண்டல அலுவலர்/செயற்பொறியாளர் அறிக்கை, ஆவணங்கள் மற்றும் விசாரணையின்போது அளித்த வாக்குமூலங்கள் ஆகியவைகள் விரிவாக பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

## ஆணை:

திரு. எஸ். ஆனந்தன், முறையீட்டு மனுதாரர், தனது 7.9.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் சென்னை, விருகம்பாக்கம் கிராமம், சர்வே எண்.189/2, 2A மற்றும் 2B, 188/3-A, ஆற்காடு சாலை கதவு எண்.44/231ல் அமைந்துள்ள MGM அப்பார்ட்மெண்ட் (ரெட்டம்மா அப்பார்ட்மெண்ட்ஸ்) குடியிருப்பிற்கான வடக்கு நுழைவாயிலான சுமார் 5,844 சதுர அடிகள் கொண்ட நிலத்தினை சட்ட விரோதமாக திருமதி. அன்பு செல்வி என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டன என்றும், அதில் அரசு டாஸ்மார்க் மற்றும் மது அருந்தும் கடை இருந்தது என்றும், பின்னர் பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக, 2017 ஆம் ஆண்டு மேற்சொன்ன டாஸ்மார்க் கடை மற்றும் மது அருந்தும் கடை அகற்றப்பட்டு, பின்னர் அக்கட்டிடம் மாநகராட்சி அனுமதி இல்லாமல் இடிக்கப்பட்டது என்றும் தெரிவித்து, மேற்படி பகுதியின் வழிபாதையான 5,844 சதுர அடி நிலத்தில் கட்டிடம் கட்ட அனுமதி கோரி மனு செய்துள்ளதை நிராகரிக்கும்படியும், குடியிருப்பு வழி பாதையினை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியும், அதை மாநகராட்சி அனுமதியின்றி இடித்தமைக்கும் நடவடிக்கை எடுக்குமாறும். மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி கணக்கு 10-128-05808-000யை ரத்து செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடுமாறும் கோரியுள்ளார்.

மேற்கண்ட முறையீட்டு மனுவின் மீது இம்முறைமன்ற 26.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் விரிவான அறிக்கை அனுப்புமாறு சென்னை பெருநகர மாநகராட்சி 10-வது மண்டல அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்-10, தமது 16.11.18 நாளிட்ட அறிக்கையில் திருமதி. P. அன்பு செல்வி அவர்களின் நிலத்தினை கள ஆய்வு மேற்கொண்டதில் அவ்விடத்தில் ஏற்கனவே அமைந்துள்ள டாஸ்மார்க் கடை மற்றும் மது அருந்தும் கூடக்கட்டிட நிலம் திருமதி. P. அன்பு செல்வி தனக்கு சொந்தமானது எனவும், அவ்விடத்திற்கான சொத்து தாஸ்தாவேஜுகள், பட்டா மற்றும் கட்டப்பட்ட கட்டிடங்களை இடிப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெற்றுள்ளதற்கான நகல்களையும் மாநகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு. C. ஆனந்தன் 28.1.2019 அன்று இம்முறைமன்றத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை விருகம்பாக்கம் ஆற்காடு சாலை எண்.44, சர்வே எண்.2189/2, 2A, 2B, 183/3-Aல் அமைந்துள்ள சுமார் 30,000 அதிகமான சதுர அடி கொண்ட நிலத்தின் உரிமையாளர் T. ரமேஷ் என்பவர் மேற்படி நிலத்தில் அடுக்ககம் கட்ட திரு. முத்துவேல், உரிமையாளர் MGM Construction என்பவருக்கு 27.4.1987-ல் பொது அதிகாரம் கொடுத்து அதன் அடிப்படையில் CMDA அனுமதி பெற்று தரைத்தளம் மற்றும் இரண்டு தளம் கொண்ட 60 குடியிருப்புகள் கட்ட அனுமதி பெற்று 60 நபர்களுக்கு நில உரிமையாளர் ரமேஷ் மூலம் பிரிக்கப்படாத பாகமாக பத்திரம் பதிவு செய்து கொடுத்து, வீடுகளை விற்பனை செய்துள்ளார் என்றும், இந்த நிலத்தின் வடபகுதியில் சுமார் 5,844 சதுர அடி நிலமானது குடியிருப்பையும், ஆற்காடு சாலையையும் இணைப்பதாகும் என்றும் இப்பகுதி நிலத்தினை நிலத்தின் உரிமையாளர் T. ரமேஷ் காலமான பிறகு, T. ரமேஷின் மனைவி திருமதி. ராதிகா என்பவர் ரமேஷின் தாயார் திருமதி. ரெட்டி கோவிந்தம்மாள் என்பவருக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து, அவர் தனது மகள் திருமதி. கீதா துரை என்பவருக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்து, அவர் திருமதி. அன்பு செல்வி என்பவருக்கு கிரய பத்திரம் செய்து கொடுத்துள்ளார் என்றும், திருமதி. அன்பு செல்வி அங்கு அமைந்துள்ள கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டிடம் கட்ட சென்னை மாநகராட்சியிடம் அனுமதி கோரிய நிலையில் உள்ளது என்றும், மேற்படி 5,844 சதுர அடி நிலமானது அவர்களது குடியிருப்பின் வழிப்பாதை என்பதால் அந்தப் பகுதியில் கட்டிடம் கட்ட அனுமதி தரக்கூடாது என்றும், ஆனால் தற்பொழுது ஆற்காடு சாலை விரிவாக்கத்திற்கு தேவையான பகுதியினை தானமாக மாநகராட்சிக்கு எழுதி கொடுக்கும் பட்சத்தில் மேற்படி அவர்களது வழி பாதையில் கட்டிடம் கட்ட அனுமதி கொடுப்பதாக உள்ளது என்றும், மாநகராட்சி மேற்படி கட்டிட அனுமதி வழங்கக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 10-வது மண்டல செயற் பொறியாளர் அவர்கள் 20.3.2019 அன்று முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள ரெட்டம்மா அடுக்ககம் குறித்து அவரும் அவரது உதவி பொறியாளர் திரு. D.முத்து ஆகிய இருவராலும் ஸ்தல தணிக்கை செய்யப்பட்டது என்றும், ஏற்கனவே இப்பகுதியில் சென்னை

பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் அடுக்கக கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு அதில் பல குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள 5,844 சதுர அடியுள்ள நிலம் திருமதி. அன்பு செல்வி என்பவருக்கு உரிய ஆவணங்கள் மூலம் கிரயம் செய்யப்பட்டு முறையாக கடந்த 2009ஆம் ஆண்டு பட்டா பெறப்பட்டுள்ளது என்றும், இந்நிலத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்றும், ரெட்டம்மா குடியிருப்பிற்கு தெற்கே அமைந்துள்ள திறந்தவெளி உபயோக நிலத்திலும் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி நிலம் முழுவதும் திருமதி. அன்பு செல்வி என்கின்ற தனியாருக்கு சொந்தமானதாகும் என்றும், ரெட்டம்மா குடியிருப்பில் உள்ளவர்களுக்கு அங்கு கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் சம்மந்தப்பட்ட பிரிக்கப்படாத பாகம் மட்டுமே சொந்தமாகும் என்றும், திருமதி. அன்புசெல்வி மேற்படி இடத்தில் விதிகளின் படி கட்டிடம் கட்ட அனுமதி கோரினால் அதில் ஆட்சேபனை தெரிவிக்க ரெட்டம்மா குடியிருப்புவாசிகளுக்கு அல்லது மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என தெரிவித்து மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

- முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, விசாரணையின் போது அளித்த வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல செயற் பொறியாளர் அவர்களின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் முறையீட்டில் தெரிவித்துள்ள 5,844 சதுர அடி நிலம் திருமதி. P. அன்பு செல்வி என்பவருக்கு சொந்தமானது என்பதற்கு ஆதாரமாக சொத்து பத்திரம் (Documents), வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட பட்டா, பத்திர பதிவு துறையினரால் வழங்கப்பட்ட வில்லங்க சான்றிதழ் (E.C.) போன்ற ஆதாரங்கள் மாநகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் முறையீட்டு மனுதாரரால், MGM அபார்ட்மெண்ட் குடியிருப்பிற்கான வடக்கு நுழைவாயிலில் 5,844 சதுர அடிகள் கொண்ட நிலம் மேற்படி அபார்ட்மெண்டிற்கு சொந்தமானது என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், திருமதி. P. அன்பு செல்வி மேற்படி இடத்தில் கட்டிடம் கட்ட அனுமதி கோரியிருந்த கட்டிட மனுவின் மீது, மண்டல அலுவலர் / உதவி செயற் பொறியாளர் தனது 22.6.17 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட இடத்தில் பொது சாலையை விரிவாக்கம் செய்ய தேவையான இடத்தை தானமாக வழங்க தடையின்மை சான்று

வழங்கினால் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளதை எதிர்த்து திருமதி. P. அன்பு செல்வி, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், நீதிப்பேராணை W.P.No.22349/2017 மற்றும் W.M.P.Nos.23430 மற்றும் 23431/2017ல் 23.4.2018 நாளிட்ட தீர்ப்பில் திருமதி. P. அன்பு செல்வி சாலை விஸ்தரிப்பு செய்ய போதிய இடம் ஒதுக்கித் தர உறுதி அளித்தால் விதிகளின்படி தனியருக்கு கட்டிட அனுமதி வழங்க பரிசீலிக்க வேண்டும் என்று ஆணை வழங்கியுள்ளது. எனவே, இந்நிலையில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின் மீது இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க ஏதும் இல்லை எனக் கருதி மேல் நடவடிக்கை கைவிடலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/ 2/6

செயலாளர் (பொ) 12/7/2019

12-7-19

12/7/19

பெறுநர்

1. திரு. எஸ். ஆனந்தன்,
   A-9- ரெட்டம்மா அப்பார்ட்மென்ட்,
   44-B, ஆற்காடு சாலை,
   விருகம்பாக்கம், சென்னை -92.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 10,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   N.S.K. சாலை, கோடம்பாக்கம்,
   சென்னை -24.

<u>நகல்</u>

1. முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
2. செயலரின் நேர்முக எழுத்தர்
3. ஊராட்சி பிரிவு அலுவலர்
4. இ. கோ. / உதரி